DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

M.C. No.05/2021

Deposition of Witness : RW1

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜாராம் | Taluk | |
| Father's Name | பழனிவேல் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **24.04.2024.** | | | |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** நான் எம்.பி.ஏ படிப்பு படித்துள்ளேன். எனக்கும், மனுதாரருக்கும் 11.04.2016 அன்று முத்தாண்டிகுப்பம் ஸ்ரீகிருஷ்ணா திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது. எங்கள் திருமணம் பெரியோர்களால் நிச்சியக்கப்பட்ட திருமணம் ஆகும். நிச்சியதார்த்தம் எந்த தேதியில் நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நிச்சியதார்த்தின் போது எனக்கு மனுதாரர் தரப்பில் 10 பவுன் நகை போட்டார்கள் என்று சொன்னால் எத்தனை பவுன் என்று எனக்கு ஞாபகமில்லை. திருமணத்தின் போது மனுதாரருக்கு 35 பவுன் நகை போட்டார்கள் என்று சொன்னால் நகை எங்கள் வீட்டில் உள்ளது. எத்தனை பவுன் என்று எனக்கு ஞாபகமில்லை. திருமணத்தின் போது மனுதாரருக்கு வழங்கப்பட்ட சீர்வரிசை பொருட்கள் எனது வீட்டில் உள்ளது என்றால் மின்னணு பொருட்கள் இல்லை. கட்டில், பிரோ, பாத்திரங்கள் போன்ற பொருட்கள் உள்ளது. நான் திருமணம் நடைப்பெற்ற போது ராம்கோ சிஸ்டம் லிமிடட் என்ற நிறுவனத்தில் வேலை பார்த்தேன். திருமணம் ஆன ஒரு மாதத்தில் மனுதாரரை அழைத்துகொண்டு சென்னையில் வாடகை வீட்டில் குடியேறினேன். அதன் பிறகு எனக்கும், மனுதாரருக்கும் அடிக்கடி சண்டை வந்தது என்று சொன்னால் சரிதான். எதனால் சண்டை வந்தது என்றால் மனுதாரர் என்ன சொன்னாலும் நான் செய்யவேண்டும் என்றும் மனுதாரர் அதிகாரம் செய்ய வேண்டும் என்றும் சொல்லி மனுதாரர் சண்டை போட்டார்.

2) எனக்கு சுமதி என்பவருடன் தவறான பழக்கம் ஏற்பட்டதால் தான் எனக்கும் மனுதாரருக்கும் சண்டை வந்தது என்று சொன்னால் சரியல்ல. சுமதியின் கணவருக்கும், எனக்கும் அடிக்கடி சண்டை நடந்தது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் சென்னையில் வைத்து 3 முறை தற்கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் நான் அவரை மருத்துவமனை அழைத்து சென்று சிகிச்சை அளித்து காப்பாற்றியதாகவும் சொல்லியுள்ள போது அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான்

மனுதாரரிடம் அதிக வரதட்சனை கேட்டு கொடுமை படுத்தியதாக மனுதாரர் என் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனால் நான் அதுபோல் எந்த செயலும் செய்யவில்லை. நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் மனுதாரர் கடலூர் மாவட்ட சமூக நல அலுவரிடம் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்டு மனுதாரரின் புகாரில் எந்த முகாந்தரமும் இல்லையென உத்தரவு இட்டுள்ளதாக சொல்லியுள்ள போது அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3) கமலினி என்பவர் எனது மகள் என்றால் சரிதான். அவர் எந்த பள்ளியில் என்ன படிக்கிறாள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது மகளின் படிப்பிற்கான செலவை மனுதாரரின் பெற்றோர் பார்த்துகொள்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது மகளின் அனைத்து செலவுகளையும் மனுதாரரின் பெற்றோர் தான் மனுதாரருக்கும், எனது மகளுக்கும் பார்த்து வருகிறார் என்றால் சரிதான். சுமதி என்பவரை திருமணம் செய்துகொள்வதற்காக மனுதாரரிடமிருந்து விவாகரத்து கோரி பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் விவகாரத்து மனு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் மனு தாக்கல் செய்தேன், நிலுவையில் உள்ளது, ஆனால் மேற்சொன்ன காரணம் சரியல்ல. எனது சொத்துக்கள் மீது பாகம் கோரி மனுதாரர் பண்ருட்டி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

4) எனது நிலத்தின் மூலமாக வருடம் ரூ. 2,00,000 - ரூ.3,00,000 வரை வருமானம் பெறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து மாதம் ரூ.90,000 சம்பளம் பெற்றுவருதாக நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரையில் மனுதாரரும், எனது மகளையும் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். மனுதாரருக்கும், அவரது குழந்தைக்கும் நான் பராமரிப்பு தொகை கொடுக்க கடமை பட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் மனுவில் கோரியவாறு தொகை கொடுக்க கடமை பட்டவன் அல்ல. எ.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ.4 ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.